திரு. கு. ஜெயக்குமார்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ரூ.5,77,28,000/-, மற்றும் கடன் கணக்கில் ரூ.55,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (25-4-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

82. 20 வேளாண்மை விற்பனைக் குழுக்களுக்கு மற்றும் அங்காடி குழுக்களுக்கு உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளது குறித்து வேளாண்மைத் துறையின் 03-01-2003 ஆம் நாளிட்ட 5 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2003 ஏப்ரல் 24]

83. வேளாண்மைத் துறையின் *04-01-2003* ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட *(2)/ஏஜி/ 20(சி-2)/2003* ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து வேளாண்மைத் துறையின் *04-02-2003* ஆம் நாளிட்ட *41* ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1987*-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *27/1989*) *52(4)(சி)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

84. *1972* ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளின் திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் *20-11-2002* ஆம் நாளிட்ட *164* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1920* ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *5/1920*) *304 (2)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

194. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2003-2004.* (தமிழ்)

195. மானியக் கோரிக்கை எண் *5*—வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2003-2004.* (தமிழ், ஆங்கிலம்)

196. வேளாண்மைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம் *2003-2004.* (தமிழ், ஆங்கிலம்)

197. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. *(2001-2003)*

198. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபதாவது அறிக்கை. *(2001-2003)*

199. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்து ஒன்றாவது அறிக்கை. *(2001-2003)*

200. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்து இரண்டாவது அறிக்கை. *(2001-2003)*